செ.வெ.எண்.40 நாள்: 15.02.2021

# தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.கி.செந்தில்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 42 பயனாளிகளுக்கு ரூ.19,82,266/- மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

---

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.கி.செந்தில்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (15.02.2021) நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பொதுமக்களிடம் மனுக்களை பெற்றுக்கொண்டார். மேலும், 42 பயனாளிகளுக்கு ரூ.19,82,266/- மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார். மேலும் மாற்றுத்திறனாளிகளிடம் இருப்பிடத்திற்கு சென்று கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்.

பின்னர் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.கி.செந்தில்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் பேசியதாவது:

தூத்துக்குடி மாவட்டத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் வருவாய்த்துறை மூலம் 29 பயனாளிகளுக்கு தலா ரூ.60,000 வீதம் ரூ.19.40 லட்சம் மதிப்பில் இலவச வீட்டுமனைப்பட்டா, 2 நபர்களுக்கு தலா ரூ.1000 வீதம் மாற்றுத்திறனாளி உதவித்தொகை ரூ.2000, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மூலம் 8 பயனாளிகளுக்கு தலா ரூ.3,573 வீதம் ரூ.28,584 மதிப்பில் விலையில்லா தையல் இயந்திரம், 2 பயனாளிகளுக்கு ரூ.5,341 வீதம் ரூ.10,682 மதிப்பில் விலையில்லா தேய்ப்புப்பெட்டி, முதலமைச்சரின் தனிப்பிரிவில் இருந்து வரப்பெற்ற மனுவில் ஒரு பயனாளிக்கு ரூ.1000 மாற்றுத்திறனாளி உதவித்தொகை என மொத்தம் 42 பயனாளிகளுக்கு ரூ.19,82,266/- மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. மேலும் 3 மாதங்களில் பெறப்பட்ட 1612 மனுக்களில் 1355 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டது. மீதமுள்ள மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பெறப்பட்ட மனுக்களுக்கு உடனடி தீர்வு காண உரிய அலுவலர்களுக்கு உத்தரவிட்டுள்ளது என பேசினார்.

கூட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.தனபதி, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.கண்ணபிரான், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி.அமுதா, சமூக பாதுகாப்பு திட்ட தனித்துணை ஆட்சியர் திருமதி.தமிழரசி, பிற்படுத்தபட்டோர் நல அலுவலர் திருமதி.ஜீவரேகா மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.